விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 9 ரபி - ஆகி 1 இதழ் 310
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-12-84

## இருபாலை மடத்தடி குடியேற்றப் பகுதியில்
# ஆயுதப் படையினர் சோதனை: 250 குடும்பங்கள் நிர்க்கதி!
## துப்பாக்கிச் சூட்டில் குழந்தை பலி?

(கல்வியங்காடு நிருபர்)

இருபாலையில் குத்தினி அல்லது மடத்தடி குடியேற்றப் பகுதியில் நேற்று ஆயுதப் படையினர் சுற்றிவளைத்து சோ. னையிட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் நடந்த துப்பாக்கிப்பிரயோகத்தில் பலர் காயமடைந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. தேவராசா என்பவரின் 3 வயது குழந்தை மரணமாகியிருக்கலாம் என பேசிக் கொள்ளப்பட்டது.

சுமார் 15 நிமிட நேரம் இங்கு துப்பாக்கிவேட்டுச் சத்தம் கேட்டுக்கொண்டிருந்ததாம். இப்பகுதியில் இருந்து சுமார் 250 குடும்பங்கள் பீதியினால் வெளியேறி நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர். இவர்களுக்கு இப்பகுதியிலுள்ள இளைஞர்களும் பொது ஸ்தாபனங்களும் உதவிகளைச் செய்து வருகின்றனர். அகதிகளாய் வந்துள்ளவர்களில் 40 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் நேற்று மாலைவரை மயக்கமான நிலையிலேயே இருந்தார். சோதனையிட்ட படையினர் அப்பகுதியிலுள்ள வீடுகளில் கதவுகள் யன்னல்களைச் சேதப்படுத்தியதாகவும், பாஸ்போட்டுகள், அடையாள அட்டைகள் போன்றவற்றை எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

## இன்று ஆரம்பம்

(புதுடில்லி)

இந்தியாவின் 8-வது பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு இன்றுகாலை ஆரம்பமாகிறது. இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு 27-ம் திகதியும் மூன்றும் கட்ட வாக்குப்பதிவு 28-ம் திகதியும் நடைபெறவுள்ளது.

## யாழ். நகரில் நேற்று திடீர் நாடகம்
# ஆயுதப்படை சுட்டதில் தந்தையும், மகனும் பலி
## காயமடைந்த பலர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

**யாழ். நகரில் நேற்றுக் காலை ஆயுதப் படையினர் நடத்திய திடீர் துப்பாக்கிப் பிரயோகத்தில், கூட்டுறவு சங்க மனேஜர் ஒருவரும் அவரது பத்து வயது பாலகனும் பலியானார்கள். மற்றும் மூவர் பலத்த காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க 'மெயின் ஸ்ரோர்ஸ்' மனேஜர் எஸ். சிவராஜாவும் (வயது 47) அவரது பத்துவயது மகன் நிமலனும் பலியானார்கள்.

அளவெட்டியைச் சேர்ந்த செல்வரத்தினம் (34 வயது), உரும்பராய் கிழக்கை சேர்ந்த ராகவன் (26 வயது), கொக்குவிலை சேர்ந்த ரி, பத்மநாதன் (27 வயது) ஆகியோர் பலத்த காயமடைந்தனர். மற்றும் சிலர் காயமடைந்ததாக கூறப்படுகிறது.

நேற்றுக் காலை சுமார் 10-30 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் இத்துப்பாக்கிப்பிரயோகம் நடந்ததாக கூறப்படுகிறது.

வாகனங்களில் வந்த ஆயுதப் படையினர் ஸ்ரான்லி வீதி கஸ்தூரியார் வீதி சந்தியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அங்குநின்றவர்கள் உயிர்தப்ப ஓடிய போது, தொடர்ந்து சுடப்பட்டதாகவும், அப்போது சிலர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

### துப்பாக்கிப் பிரயோகம்

இந்நேரம் கூட்டுறவுச் சங்க மனேஜர் சிவராசா தமது இரு பிள்ளைகளையும், சயிக்கிளில் கூட்டிவந்து பிள்ளைகளை வீதியோரத்தில் சைக்கிளுடன் நிறுத்திவிட்டு, எதிரில் உள்ள புத்தகக்கடைக்கு பத்திரிகை வாங்க சென்றபோது சந்தியில் வெடிச்சத்தம் கேட்கவே அவர் பிள்ளைகளைக்காப்பாற்ற அவ்விடத்திற்கு சென்றபோது அவர் மீதும் பிள்ளை மீதும் துப்பாக்கிச் சூடுகள் விழுந்ததாகக் கூறப்படுகிறது.

### துடிதுடித்து விழுந்தார்

பத்துவயது மகன் அவ்விடத்தில் 'அப்பா அப்பா' என்று நெஞ்சைப் பிடித்துத் துடிதுடித்துவிழுந்ததாகவும்தந்தை பிள்ளையைக் காப்பாற்ற முடியாத பரிதாப நிலையில் தன் காயத்தை பொத்திப்பிடித்துக் கொண்டு இரத்தம் பிறீட்டு வழிய வழிய ஓடியதாகவும் ஒற்றைக் கதவுதிறந்திருந்தஒரு தளபாட கடைக்குள் செல்லும் முன் அவர் நிலத்தில் விழுந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னர் கடையில் நின்றவர்கள் அவரை தூக்கிசென்று கடைக்குள் வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

புத்தக கடைக்காரரர் சந்தியில் வெடிச்சத்தம் கேட்கவே கடையை பூட்டாமல், பின் பக்கத்தால் தப்பி ஓடியதாகவும், கூறப்படுகிறது.

### சிறுவனின் சடலம்

வீதி ஓரத்தில் இரத்தம் பீறிட துடிதுடித்து கொண்டிருந்த 10 வயது சிறுவனை இழுத்துச் சென்று அங்கு வந்த ஒரு மினிபஸ்ஸில் ஏற்றிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. இச்சிறுவனின் சடலம் கோம்பையன் மணல் மயானத்திற்கு அருகில்உள்ள மலசலகூடத்தருகில் வீசப்பட்டிருந்ததாகவும், சிலர் அச்சிறுவனின் சடலத்தை ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து ஒப்படைத்ததாகவும், ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த நிலையில், சிவராஜா ஒரு 'ஒட்டோ' மூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் வழியில் மரணயானுர் ரென்றும் கூறப்படுகிறது.

சிவராசா தமது இரு பிள்ளைகளையும், யாழ் றிம்மர் மண்டபத்தில் நடக்கும் ஆங்கில வகுப்பிற்கு கூட்டிவந்த போது இச் சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

அவர்கள் வந்த சைக்கில் பின் அவ் விடத்தில் காணப்படவில்லையென்றும் துப்பாக்கி சூட்டில் தப்பிய அவரது மற்றொரு மகன் எட்டு வயது கோகிலன் கடையில் இருந்தவர்களால் வீட்டுக்கு கொண்டு சென்று விடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. நேற்று பிற்பகல் வரை அச்சிறுவன் (8வயது) அதிர்ச்சியிலிருந்து விடுபடவில்லை எனக் கூறப்படுகின்றது.

### கடைகள் மூடப்பட்டன

துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதும், நேற்று யாழ். நகரில் திறந்திருந்த கடைகள் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. டாக்ஸிகள், ஓட்டோக்கள் ஓடுவில் மினிபஸ்கள் மற்

(4ம் பக்கம் 3வதில் பார்க்க)

## பரு. முகாம்மீது குண்டுவீச்சு!

(கொழும்பு)

பருத்தித்துறை கூட்டு ஆயுதப்படை முகாம்மீது தீவிரவாதிகள் கடந்த வெள்ளிக் கிழமை குண்டுகளை வீசித்தாக்குதல் நடத்தியதாகவும், படையினர் குண்டு வந்த திக்கை நோக்கி சுட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. படையினருக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

## இரண்டாவது சபை: சிறில் மத்யூவும் எதிர்ப்பு

(கொழும்பு)

இரண்டாவது சபை ஒன்றை நிறுவுவது தொடர்பாக அமைச்சர் சிறில்மத்யூ கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் நகல் சட்டம் அமுல்படுத்தப் படுமாயின் முதலாவது சபையைவிட இந்த இரண்டாவது சபை அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கும் என அவர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் இலங்கை அமைச்சரவையில் இனப்பிரச்னை தீர்வுக்கான யோசனைகள் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளதாக யு என். ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

திரு சிறில்மத்யூ அமைச்சரவையிலிருந்து வெளியேறக் கூடும் என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

## தட்டாதெருச் சந்தியில் இனந்தெரியாத பெண்ணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தட்டா தெருச் சந்தியில், துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான ஒருபெண்ணின் சடலம் நேற்றுக்காலை காணப்பட்டது.

மஞ்சல் சட்டையும், பூப் போட்ட நிற சேலையும் அணிந்திருந்த இப்பெண்ணின் சடலம் தட்டாதெரு சந்தியில் மல்லாந்த நிலையில் கிடந்தது.

தலையில் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தம் வழிந்தோடிஉறைந்தபடி காணப்பட்டது.

கைகள் இரண்டும் பின்பக்கமாக இருந்தது. அதனுடன் ஒரு கயிறும் காணப்பட்டது. கைகள் கட்டப்பட்டதா? இல்லையா? என்பது சரியாக தெரியவில்லை

கண்கள் மூடியநிலையில், முடிகள் கலைந்து சேலையின் ஒரு பகுதி நெற்றியை சுற்றிக் காணப்பட்டது.

நேற்றுக்காலை மக்கள்சென்று பார்வையிட்டனர். இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சுமார் 40 அல்லது 45 வயது மதிக்கக் கூடிய இப்பெண்ணுக்கு அருகில் அவரின் அடையாளத்தை தெரிவிப்பதற்கான எத்தகைய தகவல்களும்இருக்கவில்லை

நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் அப்பகுதியில் துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதாக கூறப்படுகிறது.

## ஆயர் மாக்கஸ் பெர்ணண்டோ விடுத்துள்ள கோரிக்கை

(கொழும்பு)

யாழ். ரயில் நிலையத்தில் வைத்து இனம்தெரியாத இளைஞர்களினால் கடத்திச்செல்லப்பட்ட இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு கத்தோலிக்க மேற்றிராணிமார் சங்கத் தலைவர் ஆயர் பிரான்ஸ் மார்க்கஸ் பெர்ணண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

## குழந்தை கடத்தப்பட்டது

கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெற வந்த 4 வயது குழந்தையொன்று நேற்றுக் கடத்தப்பட்டது

அகதி முகாமிலிருந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு சகோதரி காந்தியுடன் வந்த வேலுரஞ்சன் என்ற குழந்தை கடத்தப்பட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## முட் கம்பிகளுடன் லொறி கடத்தல்

(கொழும்பு)

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களுக்கு முட்கம்பிகளும், மரங்கள் போன்றவற்றையும் ஏற்றிச் சென்ற லொறியொன்றை கடந்த வெள்ளிக்கிழமை இரவு இருபாலையில் வைத்து நான்கு ஆயுதம் தரித்த இளைஞர்கள் தடுத்து நிறுத்தி அங்கிருந்தவர்களை தாக்கிவிட்டு லொறியை எடுத்துச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நத்தாருக்காக ஊரடங்கு தளர்த்தப்பட்டது

[கொழும்பு]

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்றும், நாளையும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட மாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் புதன் கிழமை மாலை 6மணிக்கு அமுல் செய்யப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## வாடகைக்கு

யாழ்.பிரதானவீதியில் பெப்ரவரி 1985 தொடக்கம் வைத்திய நிலையத்திற்குரிய அறை வசதிகளுடனும், தொலைபேசி வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. வைத்தியர்சள் மட்டும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 1066 C/o ஈழநாடு. 1066

சுண்டுக்குளிக்கு அருகாமையில் நவீன வசதிகளுடன் இணைப்பாறிய சிறிய குடும்பத்திற்குரியபகுதிவீடு (Annexe) வாடகைக்குண்டு தொடர்பு விளம்பர இல 1065 C/o ஈழநாடு. 1065

## காணவில்லை

திருநெல்வேலியில் வசித்த பாக்கியம் என்ற வேலைக்காரப் பெண்ணை கடந்த 22ம் திகதி தொடக்கம் காணவில்லை சுமார் 25வயது நிரம்பிய இவர் கறுத்த நிறமும் பருமனான தோற்றமுடையவர். உயரம் 4½ அடி. இவர் பற்றிய தகவல் தெரிவித்தால் தயவு செய்து கடிதம் மூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும்.விளம்பர இல:1069, C/O 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 1069

## யாழ். மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்

6. 9, 11ஆம் தரங்களுக்குரிய புலமைப் பரிசுகளுக்கான போட்டிப் பரீட்சை: - 1985.

மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றவிரும்பும் மாணவர் (இக் கல்லூரியிற் கற்பவர்கள் உட்பட)07-01-85க்கு முன் தங்கள் விண்ணப்பங்களை அதிபருக்கு அனுப்பி வைக்கவும். பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அதிபர்

19-12-84. 1034

UNIQUE COMMUNICATION SERVICE

## யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1/1 மகாத்மா காந்தி ரோட்.
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891
கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ.1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ்.- 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

## கேள்வி அறிவித்தல்

1985ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி முற்பகல் 10-00 மணிவரை யாழ். அபிவிருத்திச்சபைப் பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப்பகுதி) அவர்களால் யாழ் அபிவிருத்திச்சபை சுளிபுரம் உப அலுவலகம் பிரதேசத்தில் இருக்கும் பின்வரும் இரண்டு வேலைகளுக்கான சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | கேள்வி பிணைப்பணம் | பத்திரப்பணம் |
|---|---|---|
| 1. சுளிபுரம் சந்தைக் கட்டிட மிகுதி வேலை | 500-00 | 100-00 |
| 2. சுளிபுரம் சந்தைக் கட்டிட நீர் விநியோக வேலை | 250-00 | 50-00 |

மேற்படி வேலைகளுக்கு அரசாங்கத் திணைக்களம் உள்ளூராட்சித் திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்த ஒப்பந்தகாரரிடம் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். முதலாவது வேலைக்கு ரூபா 30,0000/-க்கும் இரண்டாவது வேலைக்கு ரூபா 50,000/-க்கும் மேற்பட்ட தொகை பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் குறித்த வைப்புப் பணத்தையும், பத்திரப் பணத்தையும் யாழ். அபிவிருத்திச்சபை சுளிபுரம் உப அலுவலகத்தில் செலுத்தியதின் பேரில் 1985ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் யாழ். அபிவிருத்திச்சபை சுளிபுரம் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தா. தங்கராசா
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகம்,
சுழிபுரம்.

18-12-84

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நான்கு கடைகளும் பின்புறம் சகல வசதிகளுடன் கூடிய வீடும் (ஒன்றரைப் பரப்பு காணி) விற்பனைக்குண்டு. கடைகள் காலியான நிலையில் உள்ளன. விபரங்களுக்கு: 63, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1052

காங்கேசன்துறையில் யாழ். வீதியில் மேல்மாடிக் கட்டிடம் ஒன்று உண்டு கீழ் மாடி வியாபார ஸ்தலத்திற்கும், மேல் மாடியில் மூன்று படுக்கை அறைகள் கொண்டநவீனவசதிகளுடன் கூடிய வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்:- இல. 11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1063

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் இராமலிங்கம் உடபாகைத் தோட்டம் பொர்லாங்கொட விலாசமிட்ட 26.710765X இலக்க அடையாள அட்டை 13-12-84 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர் பிள்ளையார் ஸ்ரோஸ் கைதடி சந்தியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 1061

இலங்கை வங்கி க. நடனசிவம், இ. தயாநிதி இருவரினதும் அடையாள அட்டை கோண்டாவில் தபால் கந்தோரில் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் கோண்டாவில் தபால்கந்தோரில் அல்லது எம்மிடம் ஒப்படைக்கவும் திருமதி ந. தயாநிதி மே பா திருநாவுக்கரசு காளிகோவில் ஒழுங்கை கோண்டாவில். 1070

## தேவை

1985 G. C. E. (O. L.) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர் ஒருவருக்குக் கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் வீட்டில் வந்து போதிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை, திருப்தியளிக்கும் ஊதியம் அளிக்கப்படும். நேரில் வரவும். K. S. ஈஸ்வரன், பத்திரகாளி கோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவில். 1062

## சோதிடம்

இந்திரா அன்னை அகால மறைவுக்குரிய எண் சோதிட விளக்கம், M. G. Rஅவர்களின் பெயர் எண்ணின் சக்தி. தமிழ் ஆங்கில எழுத்துக்களின் மதிப்பெண் மற்றும் பல அரிய விடயங்கள் அடங்கிய ''அதிஷ்டகரமான பெயரமையுங்கள்'' வெளிவந்துவிட்டது, ஆசிரியர்; 'அன்புஜீ' 1068

## சோவியத் பாதுகாப்பு அமைச்சர் காலமானார்!

(மாஸ்கோ)

சோவியத் பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் டிமிஸ்டி உஸ்தினேவ் காலமானார். இவரது மரணச் செய்தியை வியாழக்கிழமை சோவியத் யூனியன் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இவருக்கு வயது 76.

## இந்திய அமைச்சர் காலமானார்

(புதுடில்லி)

இந்திய தொழிலாளர் நல மறுவாழ்வு துறை இணை அமைச்சர் திரு. தரம்பீர் நேற்று அதிகாலை புதுடில்லியில் காலமானார்.

48 வயதான தரம்பீர் மூளையில் ரத்தக்குழாய் வெடித்தமையினால் காலமானார். இவர் காலமானதைத் தொடர்ந்து இவர் போட்டியிடும் உத்தரப் பிரதேசம் 'செயில்' தொகுதியில் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (ரு)

## ஹட்டன் நஷனல் வங்கிக்கு எமது நன்றி

குறிப்பாக 19-12 84ல் தனது வாடிக்கையாளருக்கு செய்த உதவியையிட்டு வாடிக்கையாளரின் சார்பில் யாழ். ஹ/ந/வங்கிக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

ரஸ்ற் ரவல் சேர்விஸ்
C A 3182

## எமது வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் உளங்கனிந்த

## நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

BERLIN செல்ல விரும்புவோர் உடனடியாக தொடர்புகொண்டு ஒவ்வொரு புதன், வியாழக் கிழமைகளில் AIR LANKA விமானத்தில் பயணம்செய்வோர் உடனடியாக எம்மிடம் தொடர்பு கொண்டு உங்கள் ஆசனங்களை மலிவுக் கட்டணத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளுங்கள் யாழ்ப்பாணத்திலிருந்தே சகல பிரயாண வசதிகளும் செய்து கொடுக்கப்படும். மற்றும் Indian Visa, Passport, Reneual Alteration ஆகியன செய்து கொடுக்கடபடும்.


தொடர்புகொள்ளவும்

QUICKS ENTERPRISES
TRAVELS & TOURS
533, STANLEY ROAD, JAFENA.

Branch:
SARASWATHY GARDENS
Church Road,
Chavakachcheri.
T. Phone: 273

## ஓராண்டு நினைவஞ்சலி

உயர்திரு க. சிவராசா



தோற்றம்:

16–7–1947

மறைவு:

24–12–1983

மனிதருள் மாணிக்கமாய் துலங்கிய மாவீரனே
தெய்வமே
தனிமைதனில் சாதனைகள் பல புரிந்து
மக்கள் மனதைக் கவர்ந்த எம் அருமபெரும் தலைவா
எம் கண்ணை இமை காத்தாற் போல்
எமக்காக உயிர் வாழ்ந்தாயே எம் கண்ணே
உம்மை எமக்கற்பணித்து அல்லும் பகலும்
எமக்காகப் பாடுபட்டாயே கண்ணே
எமக்குக் கிடைத்த பாக்கியமெனப்
பூரித்திருந்தோமே எம் ஆருயிரே
தமக்கேற்பட்ட துயரங்களைத் தவிர்த்து
எம்மை இன்பக் கடலில் ஆழ்த்தி
மகிழ்ந்தாயே எம் உயிரே
வீட்டில் கலகலப்பாய் நின் கனிமுகத்துடன்
காட்சி அளிப்பாயே எம் அன்பே
நாட்டு மக்கள் புடைசூழ வீட்டில் வீற்றிருந்து
உரையாடி அவர்கள் குறை தீர்த்தாயே எம் தலைவா
எமக்கு இவ்வுலகில் இனி குறையேதும் இல்லை என
இறுமாப்புடன் இருந்தோமே கண்ணே
உமக்கு வந்தது சதி சேர்ந்த விதியோ அல்லது
மதிகெட்ட மாந்தைகளின் செயல்தானோ
எமது இன்ப வாழ்க்கைதனை தவிடுபொடியாக்கி
இருள்மயமாக்கிய காரணம்தானேனோ
உமது மறைவால் நாம் வாடி வதங்கி வெதும்பி
தயங்கி கலங்கி நிற்கின்றோம் கண்ணே
உம்மை இழந்த நாள்முதல் நினைந்து உருகி
வருந்தியெழும் எம இதயத் துடிப்பும்
நம் கண்களில் இருந்து வடியும் ஆறுக் கண்ணீரும்
உங்கள் ஆத்மா சாந்தியடையவும்
அரக்கர்களை நீறுக்கவும் உதவட்டும் இறைவா.

சோகத்தால் வாடி நிற்கும்
உங்கள் குடும்பத்தினர்.

''சிவராசபுரம்''
குடத்தனை. 1067

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைக் கிராமங்களில் 24 மணி நேரத்தில் வெளியேறும்படி உத்தரவு!

## 10 ஆயிரம் பேர் அகதிகள்!!

[யாழ்ப்பாணம்]

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமுழமுனை, கொக்கிளாய், நாயாறு, அம்பில், செம்மலை ஆகிய இடங்களிலுள்ள மக்களை 24 மணி நேரத்தில் வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது

இதனையடுத்து இவ்விடங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரம் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். இவர்கள் தற்போது முல்லைத்தீவு புனித ராயப்பர் கோயில், முள்ளியவளை மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இராணுவத்தினர் மேற்குறிப்பிட்டகிராமங்களில்காலையிலும் மாலையிலும் ரோந்து புரிந்தபோதே மக்களை வெளியேறும்படி கேட்டனராம். இதனையடுத்தே அங்கிருந்த மக்கள் பீதியினால் உடமைகள், பொருட்களைக் கைவிட்டு தாம் அணிந்திருந்த உடைகளுடனேயே வெளியேறியுள்ளனர்.

இம்மக்களின் நிலைகுறித்து முல்லைத்தீவுப் பிரஜைகள் குழுத் தலைவர் டாக்டர் குணரட்ணம், செயலாளர் ஜி செபமாலை ஆகியோர் ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு அவசரத் தந்திகளை அனுப்பியுள்ளார்.

இம்மக்களை மீண்டும் அவர்களின் இடங்களிலேயே குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் அத்தந்திகளில் கேட்டுள்ளனர். (கி)

## பிந்ரன்வாலே உறவினர் நாடு கடத்தப்பட்டார்

[லண்டன்]

பஞ்சாப் பொற்கோவிலில் வைதது இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சீக்கியத்தீவிரவாதி ஜெர்நயன் சிங் பிந்ரன்வாலின் உறவினரான ஜஸ்பிஸ் சிங் வளைகுடா விமானம் மூலம் நேற்றுமுன் தினம் இரவு டுபாய்க்கு நாடு கடத்தப்பட்டார்.

இவரை நாடு கடத்துமாறு பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் விடுத்திருந்த பணிப்பை எதிர்த்து இவரது சார்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனுவை நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்ததைத் தொடர்ந்த ஜஸ்பிஸ் சிங் நாடு கடத்தப்பட்டார். (சூ)


**ராணி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**வின்ஸர்** (யாழ்)
10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
**சிவப்பு சூரியன்**
(ஈஸ்ட்மன் கலர்(

**ஸ்ரீதர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவ
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**றீகல் மினி**
10-15, 1-30
மோகன். . நளினி...
ஜெய்சங்கர் . . சத்யராஜ்..
நடிக்கும்
மணிவண்ணனின்
**24 மணிநேரம்**

இன்று முதல்
**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
சந்திரசேகர், சுகாசினி
ராஜீவ்
**பாலைவனச்சோலை**
புதிய பிரதி
(ஈஸ்மன் கலர்)
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன்,
ஸ்ரீதேவி
நடித்த
**சத்தியம்**
(ஈஸ்மன் கலர்)


## இந்திய தேர்தல்:

# "இந்திரா காங்கிரஸை ஆதரிக்கவும்!"

## விளையாட்டு வீரர்களுக்கு கபில்தேவ் வேண்டுகோள்!!

[புதுடில்லி]

முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி காப்டன் கபில்தேவ், ரஜீவ் காந்தியின் இந்திரா காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கும்படி சகல இந்திய விளையாட்டு வீரர்களையும் கேட்டுள்ளார்.

''அக்கட்சி மட்டுமே ஒரு கட்டுப்பாடான தேர்தல் அணியைக் கொண்டுள்ளது. ஏனையவை தனித்தும், அங்குமிங்குமாகவும் உள்ளன'' என்றும் வீரர் கபில்தேவ் மேலும் கூறியுள்ளார்.

25 வயதான இந்த வீரர் தற்போது இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதற்கு அவரது முழங்காலில் ஏற்பட்டுள்ள சிறு வியாதியே காரணமென்று கூறப்பட்டுள்ளது.

இந்திரா காங்கிரஸ் கட்சியையே தாம் ஆதரிப்பதாகக் கூறியுள்ள வீரர் கபில்தேவ் அக்கட்சியில் சேர்ந்து அரசியலில் குதிக்கவும் தாம் உத்தேசித்திருப்பதாகக் கூறியுள்ளார். 83-ம் ஆண்டில் இடம்பெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில், இந்திய அணிக்குத் தலைமை தாங்கி அவ்வணியை இவர் வெற்றிபெறச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## உணவுப்பொருள் விநியோகம்:

# உதவி அரசாங்க அதிபர்களே ஏற்பாடுகளை செய்வர்

(சுண்டுக்குளி)

யாழ் மாவட்டத்திலுள்ள உத்தரவு பெற்றவியாபாரிகளுக்கும் ப. நோ. கூ. சங்கங்களுக்கும், பேக்கரிகட்கும் உணவுப்பொருட்கள் விநியோகம் செய்வதை அந்தந்தப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களே திர்மானிக்க வேண்டும். இதற்கு ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர்களை அழைத்து எப்படிஉணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படவேண்டும் என்றும் உணவு விநியோகத்தைப்பற்றி வாராந்த அறிக்கைசமர்ப்பிக்க வேண்டும் என்றும் யாழ் உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு எஸ். பற்குணம் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர்கட்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## 100 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்று ஏற்பட்ட படகு விபத்தில் 1 0க்கு மேற்பட்டடோர் பலியாகினர்.

## வடக்கு கிழக்கிலிருந்து

# பதினையாயிரத்துக்கும் மேல் சிங்கள அகதிகள்!

## ராஜாங்க அமைச்சு தகவல்

[கொழும்பு]

பதினையாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள மக்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து அகதிகளாக வெளியேறியுள்ளனர் என்று இராஜாங்கஅமைச்சுச் செயலாளர் திரு பி: ஐ. குணதுங்கா அறிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் இருநலன் புரி நிலையங்களில் 2,298 பேர் அகதிகளாகவுள்ளனர். நீர் கொழும்பில் 5,442 பேரும், புத்தளம் பகுதியில் 1,100 பேரும் அகதிகளாகியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2,400 பேரும், திருமலையில் 3000 பேரும், மொனராகலையில் 350 பேரும், மட்டக்களப்பில் 750 பேரும் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சிங்களக் குடிமக்களை வெளியேறும்படி பயமுறுத்திச் சுவரொட்டிகளும் காணப்படுவதாக இரஜாங்க அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (கி)

## யாருடையது?

கொட்டடியைச் சேர்ந்த சிவராஜா சின்னத்துரை என்பவரின் அடையாள அட்டை யாழ் கே கே எஸ். வீதியைச் சேர்ந்த திரு திரு. அ. நாகராஜாவினால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' வில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கிமுனையில் சம்பளப்பணம் கொள்ளை

(மட்டக்களப்பு

மட்டக்களப்பு ஆரையம்பதி மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் சம்பளப்பணம் 2 -000 ரூபா இனம் தெரியாத இரு துப்பாக்கி இளைஞர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

சம்பவதினம் பாடசாலை அதிபர் சம்பளப்பணத்தை வங்கியிலிருந்து பெற்றுவந்து அதனை மேற்படிபாடசாலையில் வைத்து வழங்கிக் கொண்டிருந்தபோதே கொள்ளை சம்பவம் இடம் பெற்றது

மட்டக்களப்பில் 5 நிலையங்களில் பொலிஸ் பாதுகாப்புடனேயே ஆசிரியர் சம்பளப் பணம் அதிபர்களினால் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி பாடசாலை அதிபர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் சென்று வங்கியில் பணத்தை எடுத்து வந்து மேற்படி நிலையங்களில் வைத்து சம்பளம் வழங்கப்படுகிறது மேற்படி பாடசாலை அதிபர் இவ்வாறு சம்பளப்பணத்தை வழங்காது பொலிஸ் பாதுகாப்பின்றி பணத்தை எடுத்து வந்து தமது பாடசாலையில் வழங்கிக் கொண்டிருந்த போதே இக் கொள்ளை நடந்தது

இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிசில் பாடசாலை அதிபர் வாமதேவன் புகார் செய்துள்ளார். (சூ)

## இப்படியும் நடந்தது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பகுதியிலுள்ள பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்புக்கென லொறி ஒன்றில் கொண்டுசெல்லப்பட்ட முட்கம்பிகள், சுமார் 1000 சாக்குகள் (மண் மூடை கட்டுவதற்கு), சிறிய போஸ்ட் மரங்கள், இடைநடுவில் வைத்து இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிமுனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளன

வானொன்றில் வந்த நான்கு இனந்தெரியாத நபர்கள் இருபாலையில் வைத்து துப்பாக்கி முனையில் லொறியை மறித்து அப்பொருட்களைக் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

பொலிஸ் சார்ஜன்டும், பொலிஸ் கான்ஸ்டபிளும் அப்பொருட்களை யாழ் பொலிஸ் நிலையத்திலிருந்து கொண்டு சென்றதாகவும் கூறப்படுகிறது. (மா)

## கல்முனை தபால் நிலையத்தில் கொள்ளை

(மட்டக்களப்பு)

கல்முனை தபால் நிலையத்தில் நேற்றுக் காலை இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியினால் 10,000 ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (சூ)


**நெல்லைப்**
பாதிக்கும் களைகளைக்
கொன்று
விளைச்சலைப் பெருக்குங்கள்

மெக்வூட்ஸ் பெரகொற்
(மிலி.450) ரூபா. 44.50
மெக்வூட்ஸ் எம். சி.பி.ஏ
(மி.லி. 450) ரூபா. 36.00
யூ. 46 எம். 6 (60%)
(மி.லி. 450) ரூபா. 60.00
மெக்வூட்ஸ் 3.4 டீ.பி.ஏ.
(மி.லி. 450) ரூபா. 58.00



பாவித்து அதிக
விளைச்சலும்
இலாபமும்
பெறுங்கள்

மெக்வூட்ஸ் லிமிட்டெட்
10, ஞானார்த்த பிரதீப மாவத்தை, த.பெ.இல. 91;
(முன்னாள் மருதானை ரோட்) கொழும்பு 8
தொலைபேசி: 597965 - 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

''வானக அரசும் புளித்தமாவாகும் அதனைச் சிறிதே அங்கையில் எடுத்து பலபடிமாவில் பழு தறக்கலந்தால் எல்லா மாவும் நற்பலன் தருமே வீட்டுப் பெண்கள் விளக்கம் அறிவரே.

—இயேசு காவியம்

# நமதுநோக்கு

## அகில உலகினைக் கவரும் இந்திய பொதுத் தேர்தல்!

இன்று நடைபெறும் இந்திய பொதுத் தேர்தல் உலகின் ஜனநாயக வரலாற்றில் பேரதிர்ச்சியூட்டும் நிகழ்ச்சி, உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் என்பதுமட்டுமல்ல, இந்திய மக்கள் ஜனநாயகத்தைப் பேணுவதில் உலகின் பாராட்டைப் பெற்றவர்கள் என்பதுமென்றல்ல.

இந்திரா இல்லாத இந்தியாவில், அழுத கண்ணீர் காயமுன்னரே ஒருபொதுத் தேர்தல், அன்னையார் தயாராக்கிய பொதுத் தேர்தல், தடையின்றி, தயக்கமின்றி நடைபெறுவதாஞல் அதனை 'ஹாம்லெட் இல்லாதடென்மார்க் அரசன்' நாடகம் என்று சொல்ல மனம் எழும், அது தவறென்பதும் திரும்ப சிந்தித்தால் தெளிவாகும்.

ஒன்று: நாமறிந்தளவில் இந்திய பொதுத் தேர்தல் எதுவுமே துன்பநாடகமாக வில்லை; இந்திரா காந்தியும், அவருடைய காங்கிரஸ் கட்சியும் முதன் முறை ஒரே ஒரு முறை தூக்கி எறியப்பட்ட போதும் அவ்வாறு எவரும் கணிக்கவில்லை. இந்திய ஜனநாயக உணர்வு மிக உயிர்த்துடிப்பாக இருந்தமையை அவருடைய தோல்வி விளக்கியது,

இரண்டாவது: ஹாம் லெட்டின் சிறந்த ஆளுமையில் என்ன அடிப்படைக்குறை இருந்ததோ அது நிறைவாகக் காணப்பட்டது இந்திராவில் ஒருவேளை தந்தை நேருவை சிந்தனையில் ஆழ்ந்திருந்து திடமான முடிவுகளை எடுப்பதில் தயங்கிய ஹாம் லெட்டுக்கு ஒப்பிடலாம். அவரின் வாரிசு அன்னை இந்திரா மறையும் பருவத்திலும் தீர்க்கமான 'இன்ஸ்டன்' முடிவெடுப்பதில் மிகச் சாமர்த்தியமானவராக விளங்கினர்.

எனவே இன்றைய மகத்தான நிகழ்ச்சியில் இந்திராவில்லாமை நாடுபெருவெளிதான்; அதே சமயம் அவருடைய அகால மறைவு இன்று உண்டான குறைகளுக்கு நிறைவளிக்குமென நம்ப இடமுண்டு மறைந்த இந்திரா உயிருடைய நிலையிலும் பார்க்க அதிகாரம் கூடியிருப்பதை நாம் எதிர் பார்க்கலாம்.

புதிய பிரதமர் ரஜீவ் இத்தகைய வேகத்துடன், எழுந்த கொந்தளிப்பை அடக்கியதும் துணிவுடன் தேர்தல்தேதியை நிர்ணயித்ததும்,எதிர்பாராத பேபாவில் விஷவாயுவால் ஏற்பட்ட பேரழிவை மட்டுப்படுத்தியதும், மகன் தாய்க்கு ஆற்றிய உதவியெனலாம்.

இந்திய பொதுத் தேர்தல் இந்தியாவில் மட்டுமல்ல தெற்காசியாவில் என்ன மாற்றத்தைக் கொண்டுவர வல்லதென்பதை உலக அரசியல் நிபுணர்கள்மிகநுணுக்கமாக கவனித்து வருகின்றனர்.

இதன் முடிவு, புதிய ஆட்சியின் உளநாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் நிலை தளம்பி நிற்கும் உலகை எவ்வாறு பாதிக்கும்என்பது வல்லரசுகள், குறிப்பாக அமெரிக்காவும் ரஷ்யாவும் கூர்ந்து ஆராய்கின்றன. அணிசேரா நாடுகள் ஸ்திரமாக முன்னேறுவதில் எதுவித தடையும் இருக்கமுடியாதென்ற முன்னுணர்வு தென்படுகின்றது பக்கம் சார்பவர்கள் இதனை முறித்திடுவது முயற்கொம்பு.

இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பிடக்கூடிய கருத்து: பிரதமர் ரஜீவ் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை அகில இந்தியாவின் ஆதரவுக்கும் கவனத்துக்கும் உரியதென்று வற்புறுத்தியிருப்பதே. சர்வகட்சி மாநாடு கடைபூட்டியபின் வெளியிட்ட கருத்து இது.

இலங்கை ஜனதிபதி கூறியது, ''இலங்கை பயங்கரவாதத்துக்கு எதிராக ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்தால், இந்தியா தமிழர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கை என்று வியாக்கியானம் கொடுக்கிறது''. இங்கு இன்று தப்பிவாழும் தமிழர்கள் பற்றி இது முற்றிலும் உண்மை.

இலங்கை பயங்கரவாதம் என்பது தமிழ் மக்களின் பாதுகாப்பு என இந்தியா கருதுகிறது. இலங்கை பயங்கரவாதம் தொடர்பாக தேர்தலின்பின் இந்தியஅரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை ஜனதிபதி ஜெயவர்த்தன பொறுத்திருந்து பார்க்கவேண்டுமென் கிறர்;'பந்தோபஸ்து' குளிர் ஊட்டப்பட்டு விட்டதோ?

நாம் அதே கருத்தை வேறுவிதத்தில் வற்புறுத்துகின்றேம் இலங்கை அரசின் இறைமைக்குப் பங்கம் விளைக்காத வகையில் இந்தியா இங்கு வாழும் தமிழ் மக்களை எவ்வாறு பாதுகாக்கலாமென்பதில் உடனடி உதவியில்விரையவேண்டும்.

பயங்கரவாதம் பற்றிய பேச்சுக்களை இலங்கை அரசு பொறுமையுடன் நடத்துவதை நாம் எதிர்க்கவில்லை. பாதுகாப்பே எமது இன்றையதேவை.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம்ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

# "இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாண்பதுபோல்உலகுக்கு அரசு பாசாங்கு செய்தது!"

## முன்னாள் பிரதமர் சிறிமா குற்றச்சாட்டு

(கொழும்பு)

''அரசாங்கம் தனது நோக்கங்கள் சிலவற்றை நிறைவேற்றவே சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டியிருந்தது. ஆனல் இலங்கை இனப் பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கு தீவிரமுயற்சி எடுப்பதுபோல வெளி உலகுக்கு அதுபாசாங்கு செய்தது'' என்று முன்னாள் பிரதமரும்,ஸ்ரீ ல. சு. க. தலைவியுமான திருமதி. சிறிமாவோ பண்டார நாயக்கா தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி மகாநாடு நிறைவு குறித்து தமது கட்சியின் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

திருமதி பண்டார நாயக்கா மேலும் தெரிவித்திருப்பதாவது: ''சர்வகட்சி மகாநாட்டில் அரசாங்கம் இனப் பிரச்னையைத்தீர்ப்பது குறித்து வெளியிட்ட யோசனைகளை அமுல் செய்வதைக் கைவிட வேண்டும்.

'அந்த யோசனைகள் நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே மக்கள் அவைகுறித்து மிதமாக இருக்கக் கூடாது.

''அரசாங்கம் தினமும் இலங்கையில் அதிகரித்துவரும் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பது குறித்தே தனது தரப்பில் முக்கியமளித்துள்ளது. ஆனல் இலங்கையில் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை அது முன்வைக்கவில்லை.

மகாநாட்டின் கால எல்லை நீடிக்கப்பட்டுவந்தது. இதன் மூலம் பிரச்னைக்குரிய பகுதிகளில் ஆயுதமுற்றுகையை அதிகரித்து தீவிரவாதிகளைப் பலமிழக்கச் செய்து எந்த ஒரு நிபந்தனையையும் தமிழ்த்தலைவர்கள், மற்றும் தீவிரவாதிகளை ஏற்றுக் கொள்ளச் செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது.

### யோசனைகள்

திருமதி. பண்டார நாயக்கா பின்வரும் யோசனைகள் சிலவற்றையும் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களைப் போட்டுவிட்டு சரணடையுமாறு தமிழ்த்தீவிரவாதிகளை அரசாங்கம் கேட்க வேண்டும். அப்படிச் சரணடைபவர்களுக்கு மன்னிப்பளித்து அவர்களை இலங்கையில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்திய அரசிடம் அங்குள்ள தமிழ்த்தீவிரவாதிகள் முகாம்களை மூடிவிடும்படி கேட்பதுடன், அத் தீவிரவாதிகளை இலங்கைக்கு கொண்டுவர வேண்டும்.

வெளிநாடுகளிடம் இலங்கைத் தமிழர்களை அகதிகள் என்ற ரீதியில் ஏற்கவேண்டாமெனக் கோர வேண்டும்.

வெளிநாடுகளிலுள்ள தமிழர்களிடம் இலங்கைக்கு எதிராகப் பிரசாரம்செய்ய வேண்டாமெனக் கோரவேண்டும்.

தேசிய அங்கீகாரம் கொண்ட நேர்மையான தேசியத்தீர்வே இனப்பிரச்னைக்குக் காணப்பட வேண்டும். இத்தீர்வு ஏற்பட்டுவிடப்போவதில்லை என்று அறிந்ததையடுத்தே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சர்வகட்சி மகாநாட்டிலிருந்து வாபஸ் பெற்றது. (கி)

## ஆயுதப்படை...

(1ம்பக்க 3ம் கலத்தொடர்ச்சி )

றும் தனியார் வாகனங்கள் நகரத்தைவிட்டு புறப்பட்டன. வ. போ ச. பஸ்சேவை தொடர்ந்து நடைபெற்றது

மக்கள் கால்போன போக்கில் வீதிவழியே ஓடிக்கொண்டிருந்தார்கள். சிலர் சைக்கிளை போட்டுவிட்டு, உயிரைக்காப்பதற்காக ஒழுங்கை ஊடாக ஓடினர்கள். சிலர் மதில்களை ஏறிக்குதித்து ஓடினர்கள் எங்கும் ஒரே பதற்றமாக இருந்தது.

இச் சம்பவம்பற்றி யாழ். பிரஜைகள் குழுவிற்கும் உடனடியாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகலுக்கு பின்னர் நகர் வீதி வெறிச்சோடிக் கிடந்தது.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை பொன்னம்மா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்சமயம் திருநெல்வேலி வாசியுமான செல்லத்துரை பொன்னம்மா 23-12-84ல் காலமானர். இவர் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், வைத்தீஸ்வரன், அம்பிகைபாகன் (பேரின்பம்), காந்திமதி, ரேவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தம்பிராசா, துரைராசா, பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்புமாமியும், காசிப்பிள்ளை குழந்தைவேலு, காலஞ்சென்ற காசிப்பிள்ளை கந்தையா, மருதநாயகம், தங்கமுத்து ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் 24-12-1984 முற்பகல் 11 மணியளவில் பணிக்கர் வளவில் (திருநெல்வேலி தெற்கில்) நடைபெற்று கொக்குவில் கிழக்கு கணக்கர் மரத்தடி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்

மக்கள், மருமக்கள். பேரப்பிள்ளைகள். ((1073)

## மரண அறிவித்தல்

| | |
|---|---|
| திரு. | செல்வன் |
| சுப்பையா சிவராஜா | சி. நிமலன் |
| (தந்தை) | (மகன்) |

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி ஆ. க. சுப்பையா தம்பதிகளின் மகன் திரு. சிவராஜா (முகாமையாளர், ஐக்கிய வியாபாரச்சங்கம், யாழ்ப்பாணம்), செல்வன் சிவராஜா நிமலன் (மாணவன் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோர் 23-12-84 அன்று அகால மரணமடைந்தார்கள்.

அன்னர்கள் யோகேஸ்வரியின் அருமைக் கணவரும், மகனும், கோகுலன், பாமதியின் அன்புத் தந்தையும், தமையனும், திரு. மு பாலசுந்தரம் (முகாமையாளர், சிறுப்பர்மடம், கீரிமலை), திருமதி மீன பாலசுந்தரத்தின் மருமகனும், பேரனும், நவராஜா (பொலிஸ் காரியாலயம் மன்னர்), லோகேஸ்வரி ரத்னராஜா, தவராஜா (யாழ்-கச்சேரி), ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மருமகனும், பெருமகனும், இரத்தினராஜா (இலங்கைவங்கி. யாழ்ப்பாணம்), திரு (லேக்ஹவுஸ்) ஆகியோரின் மைத்துனரும், மருமகனும் ஆவார்கள்.

அன்னர்களது பூதவுடல்கள் இல 8, பொன்னப்பா ஒழுங்கை இல்லத்திலிருந்து திங்கட்கிழமை (24-12-84) பிற்பகல் 2 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். (1075)

## மரண அறிவித்தல்

### திருமதி இலேசா இராசம்மா அருமைரத்தினம்

வறுத்தலைவிளான் தெல்லிப்பளையைச் சேர்ந்த இலேசா இராசம்மா அருமைரத்தினம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அல்பேர்ட் அருமைரத்தினத்தின் அன்பு மனைவியும், புளொசம் தம்பிஐயா (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), இராசமலர் அம்பலவாணர் (ஆசிரியை, சீனன்கலட்டி ஞானேதய வித்யாலயம், அளவெட்டி), காலஞ்சென்ற ஆர்தர் ஜெயரத்னம், யோகரத்னம் (ஆசிரியர், உடுவில் மான் பாடசாலை), இரத்னபாய் செகரத்னசிங்கம், தேவரத்னம், ஜெயமலர் அரியராசா (ஆசிரியை, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம், ஆங்கில பாடசாலை), பேள் யோகானந்தன் (ஜெனரல் இன்டஸ்றீஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், டான் தம்பிஐயா, அருள்திரு. அம்பலவாணர், இரஞ்சி அருமைரத்னம், நேசமலர் யோகரத்னம், செகரத்னசிங்கம், இராஜு தேவரத்னம்,அரியராஜா, யோகானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகுமார், அருண்குமார், விநோத்குமார் ஜெயகுமார், குமுதினி, மோகன். நிமாலன். சாந்தோ, மித்திரன், அசோகன், அகிலன், அமிலன், தேவிகா, சந்திரன், சுமி, சவுந்தி, ரவி, பிரியா, றுனேஷ், அமரேஷ், டினேஷ், நரேஷ் ஆகியோரின் அன்பு பேத்தியாரும், மீராவின் பூட்டியும் ஆவார். அன்னரின் நல்லடக்க ஆராதனை இம்மாதம் 24ஆம் திகதி திங்கள் பிற்பகல் 2-00 மணிக்கு 119, பிறெவுன் வீதி, யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டு, தெல்லிப்பளைச் சபையின் சேமக்காலையில் அன்று பிற்பகல் 3-30 மணியளவில் நல்லடக்கஞ் செய்யப்படும். (1074)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org